International Refereed Journal of Tamil Studies Research (IRJTSR) E-ISSN: 2582-5313

தமிழ் ஆய்வு ஆராய்ச்சியின் சர்வதேச நடுவர் இதழ் (ஐ.ஆர்.ஜே.டி.எஸ்.ஆர்)

Volume: 03 Issue: 04 October to December 2021 www.irjtsjournal.org

# இலங்கையில் பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்துப் பத்திரிகைகளின் செல்வாக்கு

அ.வியாசன்
விடுகை வருட மாணவன்
இந்துநாகரிகத்துறை, யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம்.

ஆய்வுச்சுருக்கம்

இலங்கையின் இந்துப்பண்பாட்டுப் வளர்ச்சியில் இந்துப் பத்திரிகைகளின் வகிபங்கு காத்திரமானதொன்றாகும். யாழ்ப்பாணத்தின் பத்திரிகைப் பாரம்பரியத்தினை ஆய்வுவசதி கருதிப் பின்வரும் மூன்று பகுதிகளாகப் நோக்கலாம். 1841-1900: பெரும்பாலும் சமயப் பரப்புரையை முன்வைத்து வெளியான பத்திரிகைகள்., 1901-1980: சமயப் பத்திரிகைகளுடன் துறைசார் பத்திரிகைகள், சமூகப் பத்திரிகைகள், செய்திப் பத்திரிகைகள் அதிகளவில் வெளியாகின. அரசியல், சமூகம், இலக்கியம் எனப் பத்திரிகைகளின் உள்ளடக்கப் பரப்பு விரிவடைந்தது., 1981-2010: ஈழநாடு எரிக்கப்படும் ஆண்டிலிருந்து தொடங்கும் இக்காலம் ஈழப்போர்க்காலம். இதன் தொடர்ச்சியாகவே 2011 இன் பின்னரான காலமும் விரிவடைகிறது. எதிர்காலத்தில் இது நான்காவது காலப்பகுதியாகக் கருதப்படலாம். இவ் ஆய்வின் நோக்கமானது பத்தொன்பதாம் நூற்றாண்டில் இந்து ஊடகத்துறை ஆற்றிய பங்களிப்பை வெளிக்கொணர்தல் என்பதை ஆய்வின் நோக்காகக் கொண்டு இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. பொருத்தமான சந்தர்ப்பத்தில் பகுப்பாய்வு, ஒப்பீட்டாய்வு மற்றும் வரலாற்று ஆய்வுமுறையியல்க;டாக நிகழ்த்தப்பட்டுள்ளது. இவ்வாய்வானது. இந்த ஆய்வானது பத்தொன்பதாம் நூற்றாண்டினை எல்லையாகக் கொண்டுள்ளது. இலங்கை நேசன், சைவ உதயபானு, சைவ அபிமானி, இந்துசாதனம், யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் போன்றன இவ்வாய்வு நிலைநிறுத்துகின்றது.

திறவுச்சொற்கள்:- இந்துசமயம், பத்திரிகை, கிறிஸ்தவம், பண்பாடு

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR 

அறிமுகம்

பத்தொன்பதாம் நூற்றாண்டு கால இலங்கையைப் பொறுத்தவரையில் பத்திரிகைத் துறையை ஊடகத்துறை என அழைக்கப்பட்டது எனலாம். குறிப்பாக. பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் தோன்றிய இந்து சமய சார்புடைய பத்திரிகைகளான இலங்கை வேந்தன் (1877), சைவ உதயபானு (1880), சைவசம்போதினி (1881), விஞ்ஞானவர்த்தினி (1982), சைவ அபிமானி (1984), இந்து சாதனம் (1889) ஆகியன இந்துப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் உந்து சக்தியாக விளங்கின.((முகுந்தன், ச., 2007, பத்தொன்பாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத்துறையின் வகிபங்கு, ப -408) இலங்கையின் புதினப் பத்திரிகைகளின் சகாப்தம் “கவர்மன்ட் கசற்” அரச வர்த்தமானி (1802) உடன் ஆரம்பமாகிறது எனலாம். இதன் பின்பு “கொழும்பு ஜேனர்னல்”, “த ஒப்ஸேவா” “சிலோன் குறோனிக்கனி” ஆயினும் அச்சுயந்திரத்தைப் பயன்படுத்திப் பிரசுங்களை வெளியிடுகின்ற உரிமை கி. பி 1834 வரை ஆங்கில அரசாங்காத்திற்கே ஏகபோமாயிருந்தது. எவ்வாறாயினும் மதத்தைப் பரப்புவதற்குப் பத்திரிகையூடகம் வாய்ப்பானது என்பதனை உணர்ந்து கொண்ட கிறிஸ்தவ மிசனரிமார்கள் தொடர்ந்து வலியுறுத்திக் கேட்டுக் கொண்டதன் பேரில் கி.பி 1934ல் பிரசுர உரிமையைப் பெற்றுக் கொண்டனர். (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -408) இதன் மூலமாக அமெரிக்க மிசனைச் சேர்ந்த “ஜோசப்நைற்” என்ற பாதிரியாரால் சமயப்பிரச்சார நோக்கத்திற்காக நல்லூரில் நிறுவப்பட்டுப் பின் மானிப்பாய்க்கு இடமாற்றம் செய்யப்பட்ட அச்சகமொன்றிலிருந்து 07.01.1841ல் உதயதாரகை வெளியிடப்பட்டது. இலங்கையின் முதலாவது தமிழ்ப் பத்திரிகை என்ற சிறப்பை உதயதாரகை பெறுகிறது. ஆயினும் இப்பத்திரிகை ஆரம்பகாலங்களில் சில பக்கங்கள் தமிழிலும் சில பக்கங்கள் ஆங்கிலத்திலும் அச்சிடப்பட்டு வெளிவந்தது என்பது குறிப்பிடத்தக்கது. பக்க எண்கள் தமிழிலும், ஆங்கிலத்தித்திலும் தொடர் எண்களாக உள்ளன. 07.01.1841 அன்று வெளியான முதல் இதழிலேயே கடைசிப்பக்கத்தில் “Printed and Published at the Americain Mission press, Jaffna by Eastman strong minor- Edited by Henry Marly and Seth Payson” (சரவணன்,என்.,2021,இலங்கையின் முதலாவது தமிழ் பத்திரிகையும் தம்ழிப் பத்திரிகையாள்களும், ப - 137) என்று காணப்படுகின்றது. முதற் பக்க குறிப்பில் முதலாவது குறிப்பே இவ்வாறு காணப்பட்டது.

இலங்கை நேசன்

பத்தொன்பதாம் நூற்றாண்டில் சுமார் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட பத்திரிகைகள் வெளிவந்தன. அவற்றில் பொரும்பாலானவை மி~னரிகளாலும், சைவ தரப்பினராலும் ஆரம்பிக்கப்பட்டவைஎன்பதையும் இங்கு குறிப்பிட்டாகவேண்டும். தமிழுக்கு முன்னரே சிங்கள மொழியில் ஆங்கில - கிறிஸ்தவத்துக்கு எதிரான பத்திரிகை தொடங்கிவிட்டது. (சரவணன்,என்.,2021, மு.கு.நூ, ப-134) அதேபோல இலங்கையில் இந்துசமயச் சார்பான முதலாவது பத்திரிகை “இலங்கை நேசன்” (கி.பி. 1877) அறியப்படுகிறது. யாழ்பாணத்திலிருந்து வெளிவந்த இதன் ஆசிரியராகத் திரு. சின்னத்தம்பி என்பவர் கடமையாற்றினார். உதயதாரகை பத்திரிகை மூலமான இந்துமதத்தின் மீது ஏவப்படுகின்ற கண்டனங்களுக்குப் பதிலுரைகள் எழுதுதற்குரியதளமாக இலங்கை நேசனை ஆறுமுகநாவலர் பயன்படுத்தினார் என்பது கவனிக்கத்தக்கது. அத்தகைய கட்டுரைகக்குள் கொடுமுடியாகத் திகழ்வது “இது நல்ல சமயம்” என்ற தலைப்பில் ஆறுமுகநாவலரால் இலங்கை நேசனில் எழுதப்பட்ட கட்டுரையாகும் இக்கட்டுரை 1877 ஆம் ஆண்டு கார்த்திகை 22இல் வெளியான இலங்கை நேசனில் இடம்பெற்றிருந்தது. எது சமயம்? என்ற வினாவுடன் தொடங்கி? சமூகத்தில் சமயத்திற்கான வகிபங்கு, சமயத்தின் உண்மை இலக்கு, சமயத் திணிப்பினால் ஏற்படுகின்ற “சுயம்” பற்றிய குழப்பம் போன்ற பல தளங்களைத் தொட்டுச் சொல்வதாக இக்கட்டுரை அமைகின்றது. இப்பத்திரிகையில் எழுதிய மயில்வாகனப்பிள்ளை, சுன்னாகம் குமாரசுவாமிப்புலவர் போன்ற பெரியோர்களும் இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிக்கான சிந்தனைகளைச் சமூகத்திடம் கொண்டு சென்றனர். (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -411) சடங்குகளின் அரசியலைப்புரிதல், இந்துகளின் பன்மையில் ஒருமைவாதப் பரம்பொருட்சிந்தனை விளக்கம் போன்ற பல மறுமலர்ச்சிச் சிந்தனைப்போக்குகளை இவர்களின் கட்டுரைகளில் செறிந்திருக்கக் காணலாம். இவர்கள் இருவரும் இலங்கை நேசனூடாக வைமன் கதிரவேற்பிள்ளையுடன் நடாத்திய சமயத்தர்ககங்கள் இந்து வெகுஜன விழிப்புணர்வுக்கு வழிகாட்டின என இ. சிவகுருநாதன் குறிப்பிட்டிருப்பதும் நோக்கத்தக்கது. குறிப்பாக “கத்தோலிக்க பாதுகாவலன்” இதற்கு இலங்கைநேசன் இடையில் எற்பட்ட இந்துப்பண்பாட்டு தொடர்பான கருத்து மோதல்களைப் “புதினக் கடுதாசிகளின் யுத்தம்” என இலங்கைநேசன் ஆசிரியர் பின்னாளில் வர்ணிப்பது கவனிக்கத்தக்கது. என ச.முகுந்தன் பத்தொன்பாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த

இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத்துறையின் வகிபங்கு என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

சைவ உதயபானு

நாவலர் மரபின் குரலாக வெளிவந்த பத்திரிகையாக “சைவ உதயபானு” அமைகின்றது. இது 1880ம் ஆண்டு புராட்டாதி மாதம் 16ம் திகதி வெளிவரத் தொடங்கியது. அதன் ஆசிரியராக ஊரெழு சரவணமுத்துப்பிள்ளை கடமையாற்றினார். இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சி என்பது முறையான சமயக் கல்வியினூடாக உறுதிசெய்யப்படும் என்ற நம்பிக்கையோடு கட்டுரைகளையும் ஆசிரியர் தலையங்கங்களையும் இப்பத்திரிகை வெளியிட்டு வந்தது. உத்தியோக வாய்ப்புக்களிற்காகக் கிறிஸ்தவப் பாடசாலைகளில் கல்வி கற்கும் இந்துச் சிறார்கள் தங்கள் பண்பாட்டு வேர்களை அறுத்துக் கொள்கிறார்கள் என்ற ஆதங்கத்தினால் காட்டமான விமர்சனங்களையும் இப்பத்திரிகை தொடர்ந்து வெளியிட்டு வந்துள்ளது.

“பாதிரிமார் பள்ளிக்கூடங்களிலே உங்கள் பிள்ளைகளைக் கற்க விடுவீரேயானால் அவர்கள் பிற்காலத்தில் நீங்களே தங்கள் பிதாக்கள் என்பதும் தோன்றவையாது. தங்கள் பெயர்களையும் மாற்றி “யோவான், யாக்கோபு” என்றும் இட்டுக்கொண்டு உங்கள் பேருக்கெல்லாம தீராப்பெரும் இழிவை நாடுவார்கள்.”

“உங்கள் புத்திரரும் பின்னைக் காலத்தில் சிவபிரானுடைய திருப்பெயரையும் தம்மையும் மாதம் ரூபாவுக்காக விற்று விடுவார்கள்”.

“சைவக்குடியிற் பிறந்த பிரபுக்களே எங்கள் அத்திவாரங்கள் ஆடாவண்ணம் ஒரு சிறியபொழுதும் தாழ்த்தக்கூடாது. அரசாட்சியாரிடம் ஒரு பள்ளிக்கூடத்தைப் பெற்று அங்கே உமது பிள்ளைகளை அனுப்புங்கள்” (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -411)

இத்தயை ஆசிரியர் தலையங்கங்களில் இடம் பெற்றுள்ள மதக்காழ்ப்புணர்வு தோய்ந்த சொற்பிரயோகங்களைக் கருத்திற் கொள்ளாது அச்செய்திக் குறிப்புக்களை ஊன்றிக் கவனித்தால் அன்றைய இந்து சமூகத்தின் யதார்த்தத்தை உணரமுடியும்.இந்துப் புத்திஜீவிகளுக்கான சமூகக் கடப்பாடு பற்றிய அனேக உள்ளார்த்தங்கள் இச்செய்திக் குறிப்புக்களுக்குள் தொனிப்பதை உணரலாம். குறிப்பாக இந்துப் பாடசாலைகளைத் தோற்றுவிக்கவல்ல ஒரு புத்திஜீவிகள் குழுமம் பொருளாதார பலத்துடன் அரசாங்க

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR

ஆதரவைப் பேச்சளவிலாவது பெற்றுக் கொண்டு செயல் தொடங்கவேண்டும் என்பதனை மீள, மீள வலியுறுத்தச் சைவ உதயபானு தவறவில்லை. இது மட்டுமின்றி இப்பத்திரிகையானது இந்து சமூகத்தைச் சுயபரிசோதனை செய்து அது சார்ந்த குறைபாடுகளையும் இந்து சமயத்தைப் பின்பற்றுவோரின் நடத்தை வழுக்கள் பற்றியும் செய்திக்கட்டுரைகளையும் ஆசிரியர் தலையங்கங்களையும் பிரசுரித்து வந்துள்ளது. "சமயம்சமயி சமயாசமயம்", "நான் ஒரு சைவனா?" "ஆசாரமும் அதிமேதாவித்தனமும்", "சைவசித்த விளக்கம்", "சைவமாணவன்", போன்ற தலைப்பிலமைந்த ஆசிரியர் தலையங்கள்களை இங்கே சுட்டிக்காட்டலாம். (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -411)

கருத்து நிலையில் சைவ உதயபானுவின் அடிச்சுவட்டைப் பின்பற்றி வெளிவந்த பத்திரிகையாக சைவசம்போதினி திகழ்ந்தது. இப்பத்திரிகையை உடுவில் வைத்தீசுவர ஐயர் என்பவர் கரலிகிதப் பத்திகையாக 1881ல் வெளியிட்டார். பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக இரண்டரை வருடங்களுக்குள் இப்பத்திரிகை நின்றுபோனது. சைவ உதயபானுவைப் போன்று குறிப்பிடத்தக்க சமூக வழிப்புணர்வினை இப்பத்திரிகையால் எற்படுத்த முடியாமைக்கு இதன் குறுகிய ஆயுட்காலமே காரணமெனலாம். மூத்ததம்பிச் செட்டியாரால் 1882ல் ஆண்டில் வெளிவரத் தொடங்கிய பத்திரிகை விஞ்ஞானவர்த்தினி ஆகும். பெயருக்கு ஏற்ற வகையில் மேட்டுக் குடிசார் புத்திஜீவிகளைத் தனது வாசகர் வட்டமாகக் கொண்டிருந்தது. விசேடமாக தத்துவார்ததப் போராட்டங்கள், அளவையில் போன்ற கருத்தியல்களை இலங்கை சமூகத்துக்கு அறிமுகம் செய்துவைத்த பெருமை இப்பத்திரிகைக்குரியது. இப்பத்திரிகையே பிற்காலத்தில் விவேகானந்தரின் ஈழவருகையின் போது உதயதாரகையினால் கிளப்பப்பட்ட சித்தாந்த வேதாந்த முரண்பாடுகள் பற்றிய சாச்சைகளிற்குத் தக்க பதில் தருவதற்கு இந்து சாதனத்தின் ஆசிரியபீடத்திற்கு உதவியது. இந்துப்பாண்பாட்டு மறுமலர்ச்சியைப் பொறுத்தவரையில் விஞ்ஞானவர்த்தினி விளிம்புநிலை மக்களை நோக்கித் தனது கருத்தியல் நீட்சியைக் கொண்டிருக்காவிடினும் நடுத்தர, மேட்டுக்குடிப் புத்தி ஜீவிகளின் மத்தியில் குறிப்பிட்டத்தக்க செல்வாக்கைப் பெற்றிருந்தது.

சைவ அபிமானி

வல்வை பொ. ஞானசபாபதிப்பிள்ளை என்பவரால் வெளியிடப்பட்ட பத்திரிகையாக சைவ அபிமானி திகழ்கின்றது. இது விஞ்ஞானவர்த்தனியைப் போலில்லாமல் ஓரளவிற்குச் சமயம் சார்ந்த வெகுஜனப் பத்திரிகையாகத் தன்னை இனங்காட்டிக் கொண்டது. இப்பத்திரிகை ஒரிரு ஆண்டுகளுக்குள் தனது ஆயுளை முடித்துக் கொண்டதாகவே அறியப்படுகின்றது.இவ் பத்திரிகை குறுகிய காலம் மட்டுமே தெழிற்பாட்டதை அறியமுடிகிறது.

இந்துசாதனம்

இலங்கைவாழ் இந்துக்களின் சமயச்சார்பான பத்திரிகைத்துறை வளர்ச்சியின் கொடு முடியாகத் திகழ்வது இந்துசாதனப் பத்திரிகையாகும். சைவபரிபாலன சபையினரின் வெளியீடாக 11.09.1889ல் முதன் முதலில் இப்பத்திரிகை வெளியானது. தமிழில் இந்துசாதனம் என்றும் ஆங்கிலத்தில் Hindu Organ எனவும் பெயரிடப்பட்டு வெளிவந்தது. இந்துக்களின் அரசியல், சமூக, சமய, பொருளதாரக் கல்வி மறுமலர்ச்சிக்கான சிந்தனை நாற்று மேடையாகவே இந்துசாதனம் தொழிற்பட்டது. அறிஞர் பே. சு. மணி அவர்கள் “இந்து சாதனம் இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியின் குரலாகவே ஒலித்தது” எனக் கூறியிருப்பதும் இங்கே சுட்டிக்காட்டத்தக்கது. (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -412)

இந்துசாதனப் பத்திரிகையானது இந்து சமூகத்தில் சமயத்தின் பெயரால் புரையோடிப்போய்விட்ட குறைபாடுகளையும் கண்டிக்கத் தவறவில்லை. ஆலயத்தில் நடைபெறுகின்ற வாணவேடிக்கை, சின்னமேளம், தெய்வத்தின் பெயரால் உயிர்பலியிடுதல் போன்ற விடயங்கள் இந்த வகையில் கண்டனத்துக்குள்ளாகின. அதே சமயத்தில் இந்து சமூகத்தினரை கண்டனத்துக்குள்ளாகின. அதே சமயத்தில் இந்து சமூகத்தினரை மதமாற்றம் முயற்சிகளில் ஈடுபட்டோருக் கெதிராகக் கடுமையான விமர்சனங்களையும் இந்துசாதனம் வெளியிடத்தயங்கவில்லை.

இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சியை எற்படுத்துவதில் பிரசங்கங்களினதும், புராணபடனம் செய்வோரினதும் பங்கு அக்காலத்தில் இன்றியமையாத இடத்தை வகித்ததென்று கூறலாம். ஏனெனில் சமூகத்தின் அனைத்து வகுப்பினரையும் ஈர்க்கவல்ல சாதனங்களாகக்

கதாபிரசங்கமும், புராணபடனமும் திகழ்ந்திருக்கின்றன. எனவே இந்து சமூகத்தின் இவர்களை ஊக்கப்படுத்தும் வகையில் செய்திக்கட்டுரைகளை இந்து சாதனம் தாங்கி வந்துதிருக்கிறது என்று ச.முகுந்தன் தனது கட்டுரையில் பின்வருமாறு எடுத்துக்காட்டுகின்றர். அதாவது "விச யப் பிரசங்கஞ் செய்வோர், கதாப்பிரசங்கம் செய்வோர், புராணபடனம் செய்வோர் எனப்படும் இந்த முகத்திறத்தாரையும் அருகிவிடவொண்ணாது. இவர்களே சமயப்பண்பாட்டை வளர்ப்பவராவார்கள். இவர்களே சமயப்பண்பாட்டை வளர்ப்பவராவார்கள். ஆலயங்களிலும் உற்சவ காலங்களிலும் இவர்களைக் கொண்டு பிரசங்கம் செய்வித்தல் வேண்டும். இங்ஙனம் செய்தாற்றான் நமது சமயமும் பண்பாடும் விருந்தியடைந்து வரும். புலால் புசித்தல், மதுபானம் முதலாந்தீமைகள் குன்றும். எனத் தொடர்கின்ற செய்திக்கட்டுரையொன்றைச் சுட்டிக்காட்டுதல் பொருத்தமாகும். இந்துப்பண்பாட்டின் முக்கிய அம்சமாகத் திகழ்வன திருக்கோயில்கள் எனலாம். இந்து மதத்திற்கு நெருக்கடிகள் எற்படுகின்ற காலகட்டங்களில் எல்லாம் திருக்கோயில்களை மையப்படுத்தி இந்துப்பண்பாடு நிமிர்வுற்றத்தை பல இந்திய, இலங்கை வரலாற்றுக் காலகட்டங்கள் எடுத்துரைக்கின்றன. (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -413)

சைவ பரிபாலன சபையின் ஆஸ்தான வெளியீடாக அமைந்தது. இந்து சாதனப் பத்திரிகையாகும். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் யாழ்பாணத்தில் நடைபெற்ற "புதினக்கடதாசிகள் யுத்தம்" என்று வர்ணிக்கப்படுகின்ற புகழ்பெற்ற சமய விவாதங்களில் இந்து சாதனத்தின் வகிபங்கு அளிப்பரியது. இந்து சாதானமானது ஆண், பெண் சமத்துவம் பற்றியும் பெண்கள் சமூகத்தில் முன்வந்து அறம் வளர்க்க வேண்டிய அவசியம் பற்றியும் வலியுறுத்தத தவறவில்லை "மனித வர்க்கத்தின் விதி வனிதையரிடததே" என்ற தலைப்பில் அமைந்த ஆசிரியர் தலையங்கமொன்றில் ஆண் தகைமையோர்களும் அவர்களுக்கு நிகரன்றே என்ற கந்தபுராணச் செய்யுள் அடியொன்று எடுத்துக்காட்டுக் காட்டப்பட்டு அறம் வளர்க்கவல்வ சக்தி ஆண்களை விடவும் பெண்களிடத்திலேயே அதிகம் உண்டு எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது. இதுமட்டுமன்றிச் "சமயப்பணி ஆற்றிய சைவமங்கையர்" என்ற தலைப்பில் வெளியான செய்திக் கட்டுரை பின்வருமாறு விரிந்து செல்கின்றது என ச.முகுந்தன் பத்தொன்பாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த

இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத்துறையின் வகிபங்கு என்னும் கட்டுரையில் குறிப்பிட்டுள்ளார்.

"உமையொருபாகன் என்ற பொழுதே சைவ உலகில் பெண்ணும் ஆணும் சமத்துவ உரிமை பூண்டுள்ளோர் என்பது அமையும்; முற்காலத்தில் சைவமங்கையர் எவ்வளவுபேர் இல்லறத்தில் இருந்து கொண்டே சமயப்பணி செய்திருக்கிறார்கள் என்பதனை நமது பெரியபுராணம் நன்றாகக் காட்டுகிறது." மேலும்; க. இராமச்சந்திரன் என்பவரால் எழுதப்பட்ட "பத்தனிவிரதம்" அல்லது "பதிவிரதாதர்மம்" என்ற தலைப்பிலமைந்த கட்டுரை "தலை நிமிர்ந்து நிற்பது எக்க~டத்திலும் அயலாரை வருத்தாது தன் தவச்செல்வர்கள் மூலம் உலகுக்கு உய்ய வழியைக் காட்டி நிற்பதும் எங்கள் புராதான இந்து நாகரிகம் ஒன்றேயாம்...தமது பூர்வ புண்ணியம் தூண்ட இந்தியா வந்தடைந்த அன்னிபெசன்ற் தேவியாரின் வாழ்க்கையை நோக்குங்கள்..... செல்வி மாக்கிறற் நோபிள் தூய அன்னைசாரதா தேவியாரைச் சந்தித்தவுடன் பல்லாயிரம் ஆண்டு கட்குமுன் இந்தியாவில் ரிசி பத்தினிகள் வாழ்ந்ததும் ஞானாபதேசம் செய்ததும் வெறுங் கட்டுக்கதைகளல்ல, முழுவதும் உண்மையே என்றுணர்ந்து சகோதரி நிவேதிகாவாக மாறிவிட்டார்." எனத் தொடர்கிறது. அக்கட்டுரை. இந்துப்பண்பாட்டின் விழுமியச் சிறப்பை உணர்ந்து அதன் வழிகிய ஐரோப்பியர் பெண்மணிகளின் வரலாறுகளைச் சுட்டிக்காட்டுவதனூடாக மேலைத்தேய நாகரிக மோகத்தினால் இந்துப்பண்பாட்டைப் புறக்கணித்துவாழமுயலும் இந்துப்பெண்களைச் சிந்திக்;க வைக்கும் பிரயத்தனமாகவே இக்கட்டுரை அமைந்துள்ளது என்பது கவனிக்கத்தக்கது. (முகுந்தன், ச., 2007, மு.கு.நூ, ப -414)

இலங்கையிற் தோன்றிய இந்துப்பத்திரிகைகளின் செல்வாக்கு பொதுவாக நாவலரது கருத்து நிலையில் ஊன்றிய பாய்ச்சலாகவே அமைந்தது. ஆயினும் காலப்போக்கில் சைவம் என்ற தளத்திலிருந்து இந்து என்ற தளத்தை நோக்கித் தம்மை அகலித்துக் கொண்ட போக்கையும் இவற்றிடையே அவதானிக்க முடியும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய இந்துப்பத்திரிகைகளுள் இலங்கைநேசன், சைவஉதயபானு, இந்துசாதனம் ஆகியவை தவிர்ந்த ஏனையவற்றால் குறித்த இலக்கை அடைய முடியவில்லை என்பது உண்மையே. ஆனால் மேற்படி மூன்று பத்திரிகைகளும் தமது நோக்கத்தில் வெற்றி பெற்றன என்றே கூறவேண்டும். இப்பத்திரிகைகள் இக்காலத்தில் புலமை பெற்றவர்கள் மத்தியில் சொல்வாக்கு இருந்தாலும் இப்பத்திரிகைகள் இலக்கினை அடைந்து கூறலாம்.

*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியான பத்திரிகைகள் தொடர்பான பல தகவல்களைக் கொண்டுள்ளது. இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் வெளியான பத்திரிகைகளில் விவேகானந்தன், சுதேசநாட்டியம், திராவிடகோகிலம், விஜயபானு, குருசந்திரோதயம், சைவசூக்குமார்த்தபோதினி, விஜயலட்சுமி, மகாவிஜயலட்சுமி, விஞ்ஞானவர்த்தினி, ஆத்மபோதினி, சண்முகநாதன், பாலபாஸ்கரன் ஆகிய பத்திரிகைகளின் சில பிரதிகளை நேரில் பார்த்து ஆராய்ந்ததாகக் குறிப்பிடும் சோமேசசுந்தரி அந்தப் பத்திரிகைகளின் முகப்புப் பக்கங்கள் ஒவ்வொன்றைத் தனது நூலில் இணைத்து உறுதிப்படுத்தியுள்ளார். இவற்றுடன் அக்காலப்பகுதியில் வெளியான இந்து பாலபோதினியின் முகப்புப் பக்கமொன்றும் அந்நூலில் உள்ளது.

1901-1930 காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் தொடங்கிய பத்திரிகைகளின் பட்டியல் வருமாறு:

1902 சுதேசநாட்டியம், 1902 விவேகானந்தன், 1907 ஆத்மபோதினி, 1908 சைவசூக்குமார்த்தபோதினி, 1908 ஞானசித்தி, 1908 குருசந்திரோதயம், 1908 இந்துபாலபோதினி, 1910 விஜய லட்சுமி, 1910 சைவபாலியசம்போதினி, 1911 விஜயபானு, 1911 மகாவிஜயலட்சுமி, 1911 கலியுகவரதன், 1911 சண்முகநாதன், 1912 விச்சுவகர்மன், 1915 பாலபாஸ்கரன், 1923 தேசாபிமானி, 1924 சைவசித்தாந்தபானு, 1925 கத்தோலிக்க தூதன், 1925 மேல் நோக்கம், 1925 தமிழர் போதினி, 1927 கலிகாலதீபம், 1927 திராவிடன், 1927 சோதிடபிரபாலினி என்பனவாகும்.11 (சோமேசசுந்தரி, 2016, கி.இ யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் 1900-1915)

மேலும் 1980 கள் யாழ்ப்பாணத்துப் பத்திரிகைகள் எண்ணிக்கை பெருமளவில் அதிகரித்த காலப்பகுதியாகும். இனப்பிரச்சினை கொழுந்துவிட்டெரியத் தொடங்கிய இக்காலப்பகுதி பல்வேறு பத்திரிகைகளின் தேவையை ஊக்குவித்தது எனலாம். "ஏதோ ஒரு வகையில் அரச கையேடுகளாகவே பிரதிபலித்து வெளிவந்த கொழும்புப் பத்திரிகைகள் புறக்கணிக்கப்பட வேண்டியன என்ற கருத்து மக்களிடையே அன்று வளர்ச்சி பெற்றுக் கொண்டிருந்த மனோநிலை" ஈழமுரசு தொடங்கக் காரணமாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வகையில் 1984 இல் ஈழமுரசும், 1986 இல் உதயனும், 1987 இல் முரசொலியும்,

வெளியாகத் தொடங்கின. மேலும் 1998 இல் சூரியகாந்தி நாளிதழும் இவ் நாளிதழ் குறுகிய காலத்தில் நின்று விட்டது. 1999 இல் வலம்புரியும், 2002 இல் தினக்குரல் யாழ்ப்பாணப் பதிப்பும், நமது ஈழநாடும் 2006 பின்னர் இவ் நாளிதழ் நிறுத்தப்பட்டது. 1991 முதல் கொழும்பிலிருந்து வார இதழாக வெளிவந்து கொண்டிருந்த தினமுரசு 2011 இல் யாழ்ப்பாணத்தில் நாளிதழாக வெளியாகத் தொடங்கியது. 2015 இல் தினமுரசு வெளியீடு நிறுத்தப்பட்டது. 2016 இல் காலைக்கதிர் நாளிதழ் தொடங்கப் பட்டது.

முடிவுரை

சுமார் ஒன்றே முக்கால் நூற்றாண்டு காலத்தில் பல இலட்சம் பத்திரிகைப் பக்கங்கள் யாழ்ப்பாணத்தில் உருவாகியுள்ளன. ஆனால் இவற்றில் எமக்குக் கிடைப்பவை மிகச் சிலவே. பத்திரிகைகளைச் சேகரிக்கும் பழக்கம் இல்லாமை, சேகரிப்பில் இருப்பினும் சரியாகப் பாதுகாக்காமை, அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் உணரப்படாமை, போர்க்கால அழிவுகள், உள்ளூரில் ஆவணக் காப்பகங்கள் இல்லாமை போன்ற பலவும் இதற்குக் காரணங்களாகின்றன. பத்திரிகைகள் ஆவணப்படுத்தப்படாமையால் யாழ்ப்பாணத்தின் முழுமையான பத்திரிகை வரலாற்றினைத் தொகுத்து எழுதுவது மிகவும் சிரமமானது. பத்திரிகைகள் வரலாற்றின் பருமட்டான முன்வரைபுகள் எனக் கூறப்படுவதுண்டு. ஆனால் அந்தப் பத்திரிகைகளின் வரலாற்றினை அறிந்துகொள்வதற்கே அவை கிடைப்பதில்லை என்பது ஆவணமாக்கத்தில் எவ்வளவு பின் தங்கியுள்ளோம் என்பதனைக் காட்டிநிற்கிறது. மூலப் பத்திரிகைகள் கிடைக்காமையால் இரண்டாம் நிலை உசாத்துணைகளையே அதிகம் பயன்படுத்த வேண்டியுள்ளது. அவ்வாறு கிடைக்கும் உசாத்துணை வளங்கள் சொற்பமாகவே உள்ளன. கிடைப்பவற்றிலும் பல்வேறு தகவற்பிழைகள் காணப்படுகின்றன. தகவல்களை உறுதிப்படுத்துவதற்கான மேலதிக உசாத்துணைகள் பெரும்பாலும் கிடைப்பதில்லை. தகவல் இடைவெளிகளை நிரப்ப வாய்மொழி வரலாறுகளையே பயன்படுத்த வேண்டியுள்ளது. ஆனால் வாய்மொழித் தகவல்கள் சில சமயங்களில் ஒன்றுடனொன்று முரண்படுகின்றன. அவ்வகையில் விரிவான தகவற் சேகரிப்புக்களும் ஆய்வுகளும் ஆவணமாக்கமும் முன்னெடுக்கப் பட வேண்டியுள்ளது. பிற்காலத்தில் இந்து பத்திரிகையின் செல்வாக்கு இல்லாமல் ஆகிவிட்டது. ஆனாலும் பத்திரிகைகளின் ஒரு பகுதியாக இந்து பண்பாட்டு தொடர்புடைய கட்டுரைகள், செய்திகள் வருவதை அவதனிக்கமுடிகிறது. தற்காலத்தில் தனி இந்து பத்திரிகைகள்

வருகை இல்லாமல்விட்டாலும் சிவபூமி ஆன்மீக சஞ்சிகை, மற்றும் சைவ பரிபாலனசபையின் மாதாந்த இதழாக இந்து சாதனம் வெளிவருகின்றது. ஆனாலும் பழமை போல மிளர்கின்றது என்பது சிந்திக்க வைக்கிறது.

## உசாத்துணை நூல்கள்


[1] முகுந்தன், ச., 2007, பத்தொன்பாம் நூற்றாண்டில் இலங்கையில் நிகழ்ந்த இந்துப்பண்பாட்டு மறுமலர்ச்சிப் போக்கில் இந்து ஊடகத்துறையின் வகிபங்கு, பொன்விழா சிறப்பு மலர், அகில இலங்கை இந்துமாமன்றம்.

[2] சரவணன்,என்., 2021, இலங்கையின் முதலாவது தமிழ் பத்திரிகையும் தம்ழிப் பத்திரிகையாள்களும்,தாய் வீ டு

[3] கோபிநாத், தி., 2020, யாழ்ப்பாணப்பதிப்புத்துறை 1990-1995, ஆவணவரலாறு, ஆவணகம்.

[4] சோமேசசுந்தரி, 2016, கி.இ யாழ்ப்பாணத்தில் பத்திரிகைகள் 1900-1915)

[5] சிவனந்தா சர்மா,1985, இலங்கையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகள், ஆவரங்கால், புத்தூர்.

[6] சிவகுருநாதன், 1993, இலங்கையில் தமிழ் புதினப் பத்திரிகைகளின் வளர்ச்சி, பாரி நிலையம், சென்னை.


*இந்த கட்டுரையில் இருக்கின்ற கருத்துகள் குறித்து ஏதேனும் எதிருகாலத்தில் சிக்கல் இருந்தால் அதற்கு கட்டுரையாளரே பொறுப்பு ஆவார்*

© 2021, IRJTSR